பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 09 வெள்ளிக்கிழமை 22.01.2021 கதிர் 309

## 4 மீனவரின் சடலங்களிலும் பிரேத பரிசோதனை முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.22

நெடுந்தீவுக் கடலில் கடற்படை ரோந்து கப்பலுடன் மோதிய சமயம் படகு மூழ்கி உயிரிழந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள்தான் என்பதனால் அவர்களின் சடலங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம்

☞ 2

## ட்ரம்பின் வெளியேற்றம் இலங்கைக்கு ஒரு பாடம்

### மனோ கணேசன் சுட்டிக்காட்டு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் இலங்கைக்கு ஒரு பாடம். நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை

☞ 2

# போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு

### ஜனாதிபதி கோட்டாபயவால் நியமனம்



இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான மூவரடங்கிய ஆணைக்குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றநீதியரசர்எச்.எம்.எம் நவாஸ் தலைமையில், ஓய்வுபெற்ற பொலிஸ்மாஅதிபர்சந்திராபெர்னாண்டோ மற்றும்ஓய்வுபெற்றமாவட்டசெயலாளர் நிமல்அபேசிறி ஆகியோர்அந்தஆணைக் குழுவின்

☞ 2



# இந்தியக் குடியரசுத் தினம்: யாழில் கொண்டாட்டம் ரத்து



### மீனவர் மரணத் துயரின் காரணமாக

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 22

இந்திய மீனவர்களின் உயிர் இழப்பின் எதிரொலியாக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம்பெறவிருந்த குடியரசு தினக் கொண்டாட்டம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிய வருகின்றது.

இந்திய மீனவர்கள் பயணித்த படகு கடந்த 18ஆம் திகதி நெடுந்தீவு அருகே இடம்பெற்ற சம்பவத்தில் தகர்ந்தது. இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த நால்வரும் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் தற்போது வரையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ளன. இதனால் ஏற்பட்ட சர்ச்சையும் பதற்றமும் தமிழகத்தில் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

☞ 2

## தடுப்பூசியைக் காட்டி மக்களை ஏமாற்றாதீர்

### அரசிடம் ரணில் வலியுறுத்து



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டங்களை தயாரிக்காமல், தடுப்பூசிகளைக் காட்டி மக்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம்.

☞ 2

## காணி முறைகேடு தொடர்பில் ஆராய விசேட பொலிஸ் பிரிவு

### அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய காணி தொடர்பான முறைகேடுகள் குறித்து ஆராய காணி அமைச்சின் கீழ் விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 2



## கட்டுமீறிய கொரோனா; மக்களே மிக அவதானம்

### குணமடைந்த தயாசிறி எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுக்கடங்காமல் பரவியுள்ளது எனவும், பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த தயாசிறி, சிகிச்சைகளை நிறைவு செய்துகொண்டு வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றின் அனுபவங்களையும், அரசு மற்றும்பொதுமக்கள்கவனம்செலுத்தவேண்டிய விடயங்களையும் அவர் தனது உத்தியோக பூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

☞ 2

## விமான நிலையங்கள் ஊடாக கொரோனா பரவவேமாட்டாது!

### இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பிரசன்ன



சுற்றுலாத்துறைக்காகத் தற்போது விமான நிலையங்கள் திறக்கப்பட்டாலும், கொரோனா பரவல் அச்சுறுத்தல் எதுவுமில்லை.

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

☞ 2

## 'கொரோனா'விலிருந்து 48,617 பேர் மீண்டார்கள்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 633 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து

☞ 2

## கொரோனாத் தடுப்பூசி போடுவது பற்றி நாளை 3 இடங்களில் விசேட ஒத்திகை!

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுக்கான தடுப்பூசி தருவிப்பதற்குச் செய்த அனுமதியளிக்கப்பட்ட நிலையில் தடுப்பூசிபோடுவது எப்படி என்பது குறித்து நாளை விசேட ஒத்திகையை நடத்த சுகாதார அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஒத்திகை பிலியந்தலை மற்றும் ராகம வைத்தியசாலை உள்ளிட்ட 3 இடங்களில் நடத்தப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தடுப்பூசி செயல்முறை தொடங்கிய பின்னர் ஏற்படக்கூடிய நடைமுறைச்சிக்கல்களைஅடையாளம் காண்பதில் ஒத்திகை கவனம் செலுத்தும். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் எத்தனை பேருக்குத் தடுப்பூசி போடலாம் என்று ஆராயப்படும்.

☞ 2

## நான்கு மீனவர்களின் சடலங்களும் நள்ளிரவு நடுக்கடலில் கையளிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.22

நெடுந்தீவுக் கடலில் உயிரிழந்த நான்கு இந்திய மீனவர்களினது சடலங்கள் இரவு 8 மணியளவில் காங்கேசன்துறை ஊடாக தமிழகம் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இலங்கை கடற்படை ரோந்து கப்பலுடன் மோதியதில் உயிரிழந்த 4 மீனவர்களின் சடலங்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் இன்றைய தினம் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்பு நீதிமன்ற அனுமதியுடன் யாழில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் சடலங்கள் கையளிக்கப்பட்டு இன்று இரவு 8 மணியளவில் காங்கேசன்துறை எடுத்துச் செல்லப்பட்டு இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்படவுள்ளன.

☞ 2

## நான்கு மீனவர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற்படையினர் அவற்றை எடுத்துச் சென்று இன்று நள்ளிரவு வாக்கில் நடுக்கடலில் வைத்து இந்திய கரையோரக் காவல் படையினரிடம் கையளிக்கவுள்ளனர்.

## விமான நிலையங்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குள் வருவதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளது என்பதை அடுத்த இரண்டு வாரங்களுக்கு ஆராய உள்ளதுடன் அவசியமாயின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வரையில் 35 விமான சேவைகள் இலங்கைக்கான பயணங்களை மேற்கொள்ள இணங்கியுள்ளன. எனவே, மீண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இது நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த ஆண்டில் மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு சுமார் 2 ஆயிரத்து 500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய விதத்திலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

பயணிகள் தம்மைப் பதிவு செய்து கொள்வது தொடக்கம் மீண்டும் இந்த நாட்டில் இருந்து வெளியேறும் வரையில் 'டிரவல் - பபிள்' திட்டத்துக்கு அமையவே செயற்பட முடியும்- என்றார்.

## கட்டுமீறிய கொரோனா; ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

அனைத்துக் கொரோனா நோயாளிகளையும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பும் நிலையில் அரசு இல்லை. பொதுமக்கள் பொறுப்பாக இருப்பதன் மூலமே கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

நாடு முழுவதும் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. காய்ச்சல், இருமல், சுவையின்மை போன்ற அறிகுறிகள் இருந்தால், குடும்ப உறுப்பினர்களை விட்டு விலகி, சுயதனிமைப் படுத்தலில் இருப்பதே சிறந்தது.

வெளிநாடுகளில் உள்ள 60 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள் அனைவருக்கும் அரசு தனிமைப்படுத்தல் நிலையங்களை ஒதுக்குவது சிரமமான காரியம். அவ்வாறானவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றுள்ளது.

## இந்தியக் குடியரசுத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் இதற்கான எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கிலும், இந்த மீனவர்களின் இறப்பின் துயரில் பங்கெடுக்கும் வகையிலும் எதிர்வரும் 26ஆம் திகதி இந்தியாவின் குடியரசுத் தினக் கொண்டாட்ட நிகழ்வு ரத்துச் செய்யப்படுவதாக அறிய வருகின்றது.

இந்தக் கொண்டாட்டம் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இங்கும் மிகவும் கோலாகலமாக இடம்பெறுவது வழமை.

இந்த ஆண்டு கொரோனா காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டபோதும் அரசியல் சூழல் காரணமாக குடியரசுத் தின கோலாகலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இராஜதந்திர நிகழ்வுகள், நெருக்கடிகள் காரணமாக இலங்கை - இந்திய அரசியலிலும் உறவிலும் பெரும் பரபரப்பு நிலவுவதும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தடுப்பூசி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது 26 கொரோனா நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற நோயாளிகள் 79 மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த விடுமுறை நாள்களில் பொது மக்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணித்ததால் கடந்த சில நாள்களில் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. - என்றார்.

## 'கொரோனா'விலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டவர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 617 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 183 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 276 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் இன்று வரை 56 ஆயிரத்து 76 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசியைக் காட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ள நிலையில் அது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்களின் குரலாக ஐக்கிய தேசியக் கட்சியின் குரல் இருக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத் திட்டங்களைத் தயாரிக்காது தடுப்பூசி தொடர்பாக அரசு கதைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், தடுப்பூசியை வழங்கிய பின்னர் பிரச்சினை முடிந்து விடும் என்று எண்ணிவிட முடியாது.

தடுப்பூசியைக் காட்டி மக்களை ஏமாற்றாது, கொரோனாவைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் தடுப்பு மருந்தைக் கொண்டு வருவது தொடர்பாக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை நாட்டுக்கு அரசு வெளியிட வேண்டும் - என்றார்.

## காணி முறைகேடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தனிநபர்களினாலும் தோட்ட நிறுவனங்களினாலும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தப் புதிய பிரிவின் ஊடாக எந்தவொரு அரசியல் மற்றும் தனியாரின் தலையீடும் இன்றி காணிகளை மீட்டு நிலமற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, காணி தொடர்பான முறைகேடுகள் குறித்து திணைக்களத்துக்குத் தெரிவிக்க 1931 என்ற விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குப் பணிப்பாளராக ஓய்வுபெற்ற புலனாய்வுத்துறையின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் புதிய பிரிவுக்குத் தலைமை தாங்க இரண்டு ஆய்வாளர்கள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## போர்க்குற்றங்கள், .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மாற்று நடவடிக்கைகளைக் கையாள்வதற்குத் தீர்மானித்துள்ள நிலையிலேயே இந்த ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி முதல் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இந்த ஆணைக் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்ததுடன், அது தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான உறுப்பினர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவினர் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கை, காணாமல்போனோர் தொடர்பாக ஆராயவென அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு அறிக்கை உள்ளிட்ட கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை ஆராயவுள்ளனர்.

அதன்படி அடுத்து கூடவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இவர்கள் தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளனர்.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவாவில் இலங்கை சார்பில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. (மற்றுமொரு செய்தி 06ஆம் பக்கத்தில்)

## ட்ரம்பின் வெளியேற்றம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவை ஒன்றையொன்று, திருத்தி, கட்டப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என அமெரிக்கா நிரூபித்து விட்டது.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க ஜனநாயக தேச அமைப்பின் ஏனைய தூண்கள், ஆம் ஐயா (இயஸ் சேர்) என்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் சரணடையவில்லை.

நீதித்துறையும், நாடாளுமன்றமும், ஊடகத்துறையும் ஜனாதிபதி ட்ரம்பை வெளுத்து வாங்கி வெளியேற்றி உள்ளன. இன்று 'ஜனாதிபதி சேர்' தோற்று போய் அவமானப்பட்டு வெளியேறியுள்ளார். அமெரிக்காவின் ஜனநாயக அமைப்பு வென்றுள்ளது.

அமெரிக்காவின் தேர்தலை அடுத்த ஆட்சி மாற்றக் குளறுபடிகளைப் பார்த்து, இலங்கையின் பல பேரினவாத 'அறிவாளிகள்' அமெரிக்காவை எள்ளி நகையாடத் தொடங்கினர். அமெரிக்காவைவிடத் தங்களை, மிகப்பெரும் ஜனநாயகவாதிகளாகக் காட்ட முற்பட்டனர். உலகுக்கு அறிவுரை கூற அமெரிக்கா தகுதியற்றது எனக் கூறி தங்களது இனவாத அட்டூழியங்களுக்கு நியாயப்பாடுகளைத் தேட முற்பட்டனர்.

இன்று இவர்களுக்கு, நெற்றியில் செருப்பால் அடித்ததைப் போல் அமெரிக்க ஜனநாயக அமைப்பு நிமிர்ந்து நிற்கின்றது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றை ஒன்று, திருத்தி, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என அமெரிக்கா நிரூபித்துவிட்டது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான எங்களது கருத்து முரண்பாடுகள் அப்படியே இருக்க, அமெரிக்காவின் இந்த உள்நாட்டு ஜனநாயக வெற்றியை நாம் பாராட்டுகின்றோம்.

இப்போது இந்த இடைக்காலத்தில், அமெரிக்காவை விமர்சித்த இலங்கை இனவாத வீரர்களைத் தேடுகின்றோம். அவர்களைக் காணவில்லை. -என்றார்.

## மேலும் 13 பேருக்குத் தொற்று; வவுனியா நகர் கொத்தணி 272

வவுனியா நகர் கொத்தணியில் மேலும் 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரம்பலின் தொடர்ச்சியாக வவுனியா நகர வரத்தகர்களிடையே பெருமளவில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்தப் பின்னணியில் உருவாகிய வவுனியா நகர் கொத்தணியில் தொற்று உறுதி செய்யப்படுபவர்களுடன் தொடர்புடையவர்கள் இனங் காணப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒரு தொகுதியினரது பரிசோதனை முடிவுகள் இன்று மாலை வெளிவந்துள்ளது.

அதனடிப்படையில் வவுனியா நகர் கொத்தணியில் மேலும் 13 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த நான்கு பேருக்கும், தோணிக்கல் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா நகர வர்த்தக நிலைய ஊழியர்கள் எட்டுப் பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து வவுனியா நகர் கொத்தணியில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 272 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 4 மீனவரின் சடலங்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை பொலிஸாருக்கு எழுத்தில் கோரிக்கையாகச் சமர்ப்பித்தனர்.

கடந்த 18ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசு என்பவரது படகில் மேசியா, நாகராஜன், செந்தில் குமார், சாம் ஆகிய நால்வரும் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலிற்கு வந்திருந்தனர்.

இந்த மீனவர்கள் நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மீது மோதியதில் மீனவர்கள் படகு நடுக்கடலில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

இதனால் படகில் இருந்த நால்வரும் நடுக்கடலில் மாயமானார்கள். நேற்று முன்தினம் அவர்களில் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

அவை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்து வரப்பட்டு மல்லாகம் நீதிபதியின் உத்தரவின் பேரில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைக்கப்பட்டன. சடலங்கள் தமது நாட்டவர்களினது என இந்தியத் துணை தூதரக அதிகாரிகள் பொலிஸாருக்கு எழுத்தில் தெரியப்படுத்தினர்.

இதேசமயம், மற்றைய இரு மீனவர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

நீதிமன்ற அனுமதியின் பெயரில் நான்கு மீனவர்களினதும் உடற்கூற்று பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டார். இதற்கமைய உடல்கள் இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பெரும் நெருக்கடிக்குள் அயலுறவு

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள்.

அப்படியாகியிருக்கின்றது இந்திய இலங்கை மீனவர் நெருக்கடி.

இலங்கை இந்திய உறவில் இது போதாத காலம் என்று இப்பத்தியில் குறிப்பிட்டிந்தோம். நடைபெறம் நிகழ்வுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன.

இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகள் இந்தியத் தரப்பில் பெரும் சீற்றத்தைக் கிளப்பி விட்டிருக்கின்றன என்பது கண்கூடு. சினேகபூர்வமான அயல் நாட்டுக்குரிய அணுகுமுறை பின்பற்றப்படவில்லை என்பது மட்டும் புலனாகுகின்றது.

இவ்விவகாரம் தொடர்பில் இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடும் கருத்து நோக்கத்தக்கது.

*"எது நடக்கக் கூடாது என்று விரும்பினோமோ, துரதிஷ்டவசமாக அது நடந்திருக்கின்றது"* என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றமை சரியானதுதான்.

தமிழக மக்கள், இலங்கைத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகள். அத்தகைய தமிழகத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே தற்போதைய இலங்கை அரசு தன்னைக் கடற்றொழில் அமைச்சராக நியமித்து என்பதை நினைவூட்டுகின்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அவரைப் பொறுத்த வரை, அவர் இவ்விடயத்தில் இலங்கையின் அமைச்சர் என்றாலும் அதையும் தாண்டி, இப் பிரச்சினையில் இரு தரப்புகளுக்கு மத்தியில் இக்கட்டில் சிக்கியவர்.

ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தனித்து, முரண்பாட்டைத் தவிர்க்கச் செய்து, மீண்டும் நட்புறவு – நல்லுறவு – சூழலை ஏற்படுத்துவதில் அவர் ஆக்கபூர்வமாகப் பங்களிக்க முடியும்; பங்களிக்க வேண்டும்.

இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி வெறுமனே எல்லை தாண்டி மீன் பிடிக்கும் மீனவர் பிரச்சினையாக மட்டும் அமைந்து விடப் போவதாகத் தெரியவில்லை. மீனவர் பிரச்சினை என்றால், அதற்கு சுமுக இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த அதனுடன் விடயத்தை முடித்து விடலாம். ஆனாலும் இது அதனையும் தாண்டிய விபரீதம் போலத் தோற்றுகின்றது.

இந்த மீனவர் நால்வரின் மரணங்களுக்கு முன்னரே, தமது ட்ரோலர் படகுகளில் கறுப்புக் கொடி பறக்க விட்டபடி கச்சதீவுக்கு அணி வகுக்கும் தமது போராட்டத்தை ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்திருந்தனர்.

அந்த அறிவிப்பு – முஸ்தீபு – வெறுமனே இந்திய மீனவரின் வெறுப்புணர்வை – ஆத்திரத்தை – பாரம்பரிய பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்குரிய தமது உரிமை என அவர்கள் கருதும் வாழ்வாதார அடிப்படையை மறுப்பதற்கு எதிரான சீற்றத்தை – மட்டும் வெளிப்படுத்தி நிற்பதாகத் தோன்றவில்லை.

அதற்குப் பின்னால், இந்தியத் தரப்பின் இராஜ்ய உரிமை நிலைநாட்டல் எண்ணம் ஒன்றும் ஊடுருவிக் கிடப்பதாகவே தோன்றுகின்றது.

1976 இல் இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட கடல் எல்லை தொடர்பான ஒப்பந்தத்தின் கீழேயே கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்தியத் தரப்பின் வார்த்தைகளில் கூறுவதானால் தாரை வார்க்கப்பட்டது. எனினும் அந்தத் தீவில் இந்திய மீனவர்கள் தமது வலைகளைக் காயப் போடுவதற்கான உரிமையும் அந்த உடன்பாட்டின் கீழ் இந்திய மீனவருக்கு உண்டு எனக் கூறப்படுகின்றது. ஆனால், கச்சதீவு அருகே வைத்தும் இந்திய மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்து அவர்கள் தொடர்பில் இலங்கைக் கடற்படை அத்துமீறி நடவடிக்கை எடுக்கின்றது என்றும் குற்றச்சாட்டு உள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான், கச்சதீவுக்குக் கறுப்புக் கொடியுடன் ட்ரோலர்களின் அணி வகுக்கும் தமிழக – குறிப்பாக ராமேஸ்வரம் – மீனவர்களின் நாளைய போராட்டத்துக்கு முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன.

இந்தப் போராட்டத்தை இந்தியா எப்படிக் கையாளப் போகின்றது என்பதில்தான் இலங்கை – இந்திய உறவு இனிமேல் எப்படிக் கட்ட விழும் என்பதை நாம் ஊகிக்க முடியும்.

இந்திய மீனவர்களின் படகு அணிக்கு இந்தியா தடை விதிக்கலாம். அல்லது இந்தியக் கடல் எல்லை வரை அவர்களை முன்னேற அனுமதித்து, அதற்கு அப்பால் மேலே செல்ல விடாமல் தடுக்கலாம். அல்லது இந்திய மீனவரின் படகு அணி தன்பாட்டில் கச்சதீவு வரை சென்று தனது எதிர்ப்பைக் காட்டி விட்டுத் திரும்பி வரும் வரைப் பார்த்திருக்கலாம். அவற்றை எல்லாவற்றையும் தாண்டி, கச்சதீவுக்குச் செல்வதும், அதில் கால் வைப்பதும் இந்திய மீனவருக்கு உள்ள உரிமை, அதை நிலைநாட்டுவதற்கு இடமளிக்கும் வகையில் – இந்திய மீனவரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விதத்தில் – அந்த நடவடிக்கைக்கு இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவற்படை பாதுகாப்பு வழங்கும் என்ற தீவிர நிலைப்பாட்டை இந்தியா எடுக்கலாம்.

இவ்விடயத்தில் இந்தியத் தரப்பு எடுக்கும் தீர்மானமும், இலங்கைத் தரப்பு காட்டக் கூடிய எதிர்வினையும்தான் இனி இலங்கை – இந்திய நட்புறவு எத்திசையில் நகரப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறுவனவாக அமையும் எனக் கருதலாம்.

1987 இல் யாழ் குடாநாடு மீது பெரும் பொருளாதாரத் தடையை விதித்து, அதன் மீது இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு ஆரம்பித்த போது தமிழகத்தில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொதிகளுடன் வந்த இந்திய உதவிப் படகுகளை நடுக்கடலில் இலங்கைக் கடற்படை தடுத்தது. அதன் விளைவே 'ஒப்ரேஷன் பூமாலை' யாக வான் வழியே இந்திய விமானங்கள் யாழ்ப்பாணம் மீது உதவிப் பொருள்களை வீசவும், கடைசியில் இலங்கையில் இந்தியப் படைகளின் நேரடிப் பிரசன்னம் வரையும் வழி செய்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு கொழும்பைக் கட்டாயப்படுத்திய அன்றைய அந்தச் சூழ்நிலை போன்று உள்ளது இப்போதைய நிலைமை. இதன் முடிவு என்னாகும்? கச்சதீவு மீண்டும் சர்ச்சைக் குரியதாகலாம்!

# எது நடக்கக் கூடாதோ அது நடந்திருக்கிறது!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தொழில் ஈடுபட்டிந்தபோது ஏற்பட்ட துன்பகரமான சம்பவத்தில் சிக்கி, நான்கு இந்தியக் கடற்றொழிலாளர்கள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், நால்வரது சடலங்களும் கிடைத்துள்ளன என்ற செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



இவ்வாறான இழப்புக்கள் பலவற்றைக் கடந்தி வந்த அனுபவத்தின் அடிப்படையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரதும் உறவினர்களினதும் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றேன். அவர்கள் சூழ்ந்திருக்கும் துன்பக் கடலில் இருந்து அவர்கள் மீண்டு வர வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

இலங்கையின் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதில் இருந்து, இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, இலங்கை கடற்றொழிலாளர்களும், எமது உறவுகளான இந்தியக் கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்படாத வகையில் இரண்டு தரப்பினரும் இணங்கிக் கொள்ளும் வகையிலான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தேன்.

மேலும் அதுதொடர்பான முன்வரைவு ஒன்றைத் தயாரித்திருந்தேன். கடந்த வருடம் ஜனவரி மாதம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது இந்தியப் பிரதமரிடமும் கையளித்திருந்தேன்.

இந்தியத் தரப்பினரும் குறித்த திட்டத்தை வரவேற்றிருந்தனர். எனினும் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட கொவிட் – 19 காரணமாக அதனை முன்கொண்டு செல்ல முடியவில்லை.

அண்மைக்காலமாக இந்தியக் கடற்றொழிலார்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் அதிகரித்திருந்த நிலையில், குறித்த செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் இலங்கை – இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில் கடலில் மோதல் ஏற்பட்டு, விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்பட்டு விடும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தேன். எது நடக்கக் கூடாது என்று விரும்பினேனோ, துரதிர்ஷ்டவசமாக அது இப்போது நடந்திருக்கின்றது.

உயிரிழந்தவர்கள் இந்தியக் கடற்றொழிலாளர்களாக இருப்பினும், அவர்களும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகள். கடந்த காலங்களில் நாம் துன்பத்தை சுமந்த வேளைகளில் எல்லாம் எமக்காக உரிமையுடன் குரல் கொடுத்தவர்கள். எமக்காகத் துடிப்பதற்கு பாரத தேசம் இருக்கின்றது என்ற நம்பிக்கையை எமக்கும் இன்றும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள்.

அவ்வாறானவர்களுக்கு இன்னல் ஏற்படுவதை என்னால் எவ்வாறான சூழலிலும் தாங்கிக் கொள்ள முடியாது. நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

எனினும், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதை தடுக்கும் நோக்கில் உண்மையில் நடந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் மேற்கொண்டுள்ளேன்.

அதேவேளை, உணர்ச்சிவசப்பட்ட முடிவுகள் எந்தளவிற்கு இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவன் என்ற அடிப்படையில், இந்தியக் கடற்றொழிலாளர்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்ச்சி வசப்படாது புத்திசாதுரியமாக எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்

எவ்வாறிருப்பினும், இவ்வாறான சம்பவங்கள் முழுமையாக தடுக்கப்பட வேண்டுமாயின் இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினை நிரந்தமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



யாழ். நீரிழிவுக் கழகத்தினரால் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு நீரிழிவு பரிசோதனை, இரத்தப் பரிசோதனை BMI உடற் திணிவு சுட்டி ஆகியவற்றை பரிசோதிக்கும் மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டு நீரிழிவு தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வும் நடத்தப்பட்டது.

## இலங்கை பங்குச்சந்தை திடீரென அதிகரிப்பு!

இலங்கை பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலை சுட்டெண் 8 ஆயிரம் புள்ளிகளைக் கடந்துள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் கடந்த வியாழக்கிழமை அதிகளவான புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அதனடிப்படையில்,கொழும்பு பங்குச் சந்தை அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 8,184.14 புள்ளியாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோ விபத்து; ஒருவர் காயம்!



மூதூர் பாலத்துக்கு அருகில் ஓட்டோ ஒன்று கடந்த வியாழக்கிழமை காலை விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில், மூதூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூதூரிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குடியரசு தின விழாவில் கலை நிகழ்ச்சிகள் இரத்து; நேரில் வரவேண்டாம் என தமிழக அரசு அறிவிப்பு

சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் பள்ளி கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இல்லை என்றும், விழாவைக் காண நேரில் வர வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக குடியரசு தின விழாவில் கலை நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேநேரம் மூத்த குடிமக்கள், பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் குடியரசு தின விழாவை காண வருவதை தவிர்க்க வேண்டும் எனவும் குடியரசு தின நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திர போராட்ட வீரர்களின் வீடுகளுக்கு சென்று மரியாதை செலுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. என அவ் அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

குடியரசு தினத்தன்று சென்னை மெரினா கடற்கரை யில் காலை 8 மணிக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தேசியக் கொடியேற்றுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேரறிவாளன் விடுதலை விவகாரம் ஆளுநருக்கு ஒரு வாரம் அவகாசம்

## உச்ச நீதிமன்றம் காலக்கெடு

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள பேரறிவாளன், தனது தண்டனையை நிறுத்தி வைத்து விடுவிக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமை யிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, பேரறிவாளனை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது என மத் திய அரசு வாதிட்டது. நேற்றைய விசாரணையின்போது, மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றியது, தமி ழக ஆளுநர் 3 அல்லது 4 நாட்களில் முடிவு எடுப்பார் என மத்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் இன்றைய விசாரணை யில், பேரறிவாளன் தரப்பில் மீண்டும் முறையீடு செய்யப்பட்டது. பேரறிவாளன் விடுதலை தொடர்பான பரிந்துரை மீது ஆளுநர் ஒரு வாரத்திற்குள் முடிவு



எடுக்க வேண்டும் என நீதிபதிகள் அவகாசம் வழங்கி வழக்கு விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர். பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசு ஆளு நருக்கு பரிந்துரை செய்து 2 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஆளுநர் இந்த பரிந்துரை மீது முடிவு எடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சசிகலாவுக்கு கொரோனா பாதிப்பு பெங்களூரு மருத்துவமனை தகவல்



மூச்சுத்திணறலால் பெங்களூரு அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சசிகலாவுக்கு, கொரோனா வைரஸால் ஏற்படும் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டி ருப்பது உறுதி ஆனது. அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் வைத்தியர்கள் தொடர் சிகிச்சை அளித்து வருகிறார்கள்

பெங்களூரு விக்டோரியா மருத்துவ மனைவெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், 66 வயதான சசிகலாவுக்கு சர்க்கரை, ரத்த அழுத்தம், தைராய்டு பாதிப்பு இருப் பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சசிகலாவின் நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு போன்றவற் றையும் தெரிவித்துள்ள மருத்துவ மனை நிர்வாகம், அவருக்கு ரத்தத்தில் ஆக்சிஜன் செறிவின் அளவு 95 சதவீத மாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

நுரையீரலில் தொற்று பாதிப்பு அதி கமாக இருப்பதால், மூச்சிரைப்பு இருப்ப தாகவும், தொடர்ந்து மருத்துவக் கண்கா ணிப்பில் வைக்கப்பட்டுள்ள அவருக்கு, கொரோனாவுக்கான சிகிச்சைகள் அளிக் கப்பட்டு வருவதாகவும் பெங்களூரு விக் டோரியாமருத்துவமனைதெரிவித்துள்ளது.

# தமிழக முதல்வர் - மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திடீர் சந்திப்பு; தமிழக மீனவர் மரணம் தொடர்பானதா?



தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியுடன் மத்திய மீன்வளத் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் இன்று சந்தித்து பேசினார். சென் னையில் உள்ள முதல்வரின் இல் லத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

தமிழக மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படை கொன்றதாக புகார் எழுந்துள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந் ததாக கருதப்படுகிறது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் தாக்குதல் நடத்துவது குறித்து இந்த சந்திப்பின்போது பேசப்பட் டிருக்கலாம் என தெரிகிறது.




# கர்நாடகாவில் வெடிவிபத்து 10 தொழிலாளர்கள் மரணம்

கர்நாடக மாநிலம் ஷிவ மோகா அருகே டைனமைட் மற்றும் ஜெலட்டின் குச்சிகள் வெடித்து 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

அப்பகுதியில் சட்ட விரோ தமாகஇயங்கிவரும்கல்குவாரிக்கு லொறியில் வெடி பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்றபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. லொறியில் சென்ற பீகாரைச் சேர்ந்த தொழிலாளர்கள் 10 பேர் உயிரிழந்ததாக முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



வெடிவிபத்து நிகழ்ந்தபோது ஷிமோகா மட்டுமின்றி, தாவணகரே, உத்தர கன்னடா, சிக்கமகளூரு உள் ளிட்ட அண்டை மாவட்டங்களிலும் பயங்கர சத்தமும், நில அதிர்வும் உணரப்பட்டதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.




# துணை அதிபராக கமலா பொறுப்பேற்றமையால் இந்திய – அமெரிக்க உறவை வலுப்படுத்தும்

## வெள்ளை மாளிகையின் ஊடகப்பிரிவு தகவல்

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோ பைடனும், துணை அதிபராக இந்திய வம்சாவளி தலைவரான கமலா ஹரிஸும் பதவியேற்றுள்ளனர். அமெரிக்காவின் முக்கிய பொறுப்பில் இந்திய வம்சாவளி பெண் அங்கம் வகிக்கின்றமையினால், இந்தியாவுட னான உறவு மேலும் வலுவடையும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உள்ளது. இதனை வெள்ளை மாளிகை உறு திப்படுத்தி உள்ளது.

வெள்ளை மாளிகையின் ஊடகப் பிரிவு செய லாளர் ஜென் சாகி கூறி யிருப்பதாவது:–

பல முறை இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அதிபர் பைடன், இந்தியாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தலைவர்களுக்கு இடையி லான நீண்ட கால வெற்றிகரமான உறவை மதிக்கிறார். இது தொடரவேண் டும் என்றும் விரும்புகிறார்.

மேலும், துணை அதிபராக முதல் முறையாக இந்திய அமெரிக்கர் பொறுப்பேற்றிருப்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் வரலாற்று தருணம். இதன் மூலம் இந்தியா – அமெரிக்கா நட்புறவின் முக்கியத்துவம் மேலும் வலுப்பெற்றுள்ளது. இவ்வாறு ஜென் சாகி கூறி உள்ளார்.

அதிபர் பைடன் தனது அமைச் சரவையின் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பதவிகளில் இந்திய வம்சா வளியினரை நியமித்திருப்பது குறிப் பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஈராக் தலைநகரில் தற்கொலை தாக்குதல் 32 பேர் பலி; தாக்குதலுக்கு ISIS உரிமைகோரல்





ஈராக் தலைநகரில் சுமார் மூன்று ஆண்டுகளின் பின் நேற்று நடைபெற்ற மிகப்பெரிய தற்கொலை குண்டுவெடிப்பில் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டதாகவும் குறைந்தது 110 வரை காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று நெரிசலான பாக்தாத் சந்தையில் நடந்த தாக்குதலுக்கு இஸ்லாமிய போராளிகள் அமைப்பு (ISIS) இன்று காலை பொறுப்பேற்றுள்ளது. இரு தற்கொலை குண்டுதாரிகளே இந்த தற்கொலை தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதே சந்தையில் ஜனவரி 2018 இல் இறுதியாக நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிய தலைநகரில் கிட்டத்தட்ட தினசரி நிகழ்வான தற்கொலைத் தாக்குதல்கள் சமீபத்திய ஆண்டுகளில் ISIS போராளிகள் தோற்கடிக்கப்பட்டதிலிருந்து இல்லாதிருந்தது, இருப்பினும் நேற்றைய தாக்குதல் மக்கள் மத்தியில் தாங்கள் பழைய பயம் நிறைந்த வாழ்க்கைக்கு செல்கிறோமா என்ற பேரச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஈராக் பிரதமர் மந்திரி முஸ்தபா அல் – காதிமி நேற்றைய தாக்குதல் களைப் பற்றி விவாதிக்க உயர் பாதுகாப்பு தளபதிகளுடன் அவசர சந்திப்பை நடத்தியதாக பிரதமர் அலுவலகம் ஒரு சுருக்கமான அறிக்கையில் தெரிவித் துள்ளது.

பின்னர், அவசர கூட்டத்தைத் தொடர்ந்து, பிரதமர் காதிமி முக்கிய பாதுகாப்பு மற்றும் காவல்துறை தளபதிகள், உளவுத்துறை துணை உள்துறை அமைச்சர், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் உள்துறை அமைச்சகத்தின் உளவுத்துறை இயக்குனர் மற்றும் மத் திய பொலிஸ் படைகளின் தளபதி ஆகியோரை பணிநீக்கம் செய்ததாக ராணுவ செய்தித் தொடர்பாளர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தை துரத்தும் கொரோனா ஒரே நாளில் 37 ஆயிரம் பேர் பாதிப்பு

இங்கிலாந்தில் உருமாறிய புதிய வகை கொரோனா வேகமாக பரவி வருகிறது. கொரோனா வைரஸுக்கு எதிராக பைஸர் நிறுவனத்தின் தடுப்பூசி போடும் பணி ஒரு பக்கம் நடந்தாலும் உருமாறிய கொரோனா வைரஸ், அந்த நாட்டுக்கு பெரும் தலைவலியாகவே அமைந்துள்ளது.

இதையடுத்து, இங்கிலாந்து முழுவதும் மீண்டும் ஊரடங்கை அமல்படுத்தியுள்ளார் பிரதமர் போரிஸ் ஜான்சன்.

உலக அளவில் கொரோனா பாதிப்பில் பிரிட்டன் தற்போது 5 ஆவது இடத்தில் உள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்தில் கடந்த 24 மணி நேரத்தில் 37 ஆயிரத்து 892 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு தொற்று பாதித்தவர்கள் எண்ணிக்கை 35 லட்சத்து ,43 ஆயிரத்தையும் கடந்துள்ளது.

அதேபோல், கொரோனா தொற்று பாதிப்பால் ஒரேநாளில் 1,290 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து அங்கு கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களில் எண்ணிக்கை 94 ஆயிரத்து 580 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றில் இருந்து 15 லட்சத்து ,86 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

# மாஸ்க் கட்டாயம் பைடன் வேண்டுகோள்



அமெரிக்காவின் 46வது அதிபராக ஜோ பைடன் பதவியேற்றதும் வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் தனது பணிகளை தொடங்கினார்.

அதிபராக பதவியேற்ற முதல் நாளிலேயே முந்தைய அதிபர் டொனால்டு ட்ரம்ப் எடுத்த சில கொள்கை முடிவுகளை மாற்றியமைத்துள்ளார். கொரோனா நெருக்கடி, குடியேற்றம், இனவாத பிரச்சினை உள்ளிட்ட 15 முக்கிய உத்தரவுகளில் கையெழுத்திட்டார் பைடன்.

கொரோனா நோய்த்தடுப்பு விடயத்தில் மத்திய அரசின் நடவடிக்கையை அதிகரிப்பது தொடர்பான உத்தரவில் முதலில் கையெழுத்திட்டார்.

இந்நிலையில், கொரோனா வைரஸால் ஏற்படும் உயிரிழப்பைத் தடுக்க அடுத்த 100 நாட்களுக்கு அனைவரும் கண்டிப்பாக மாஸ்க் அணிய வேண்டும் என அதிபர் ஜோ பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, அதிபர் பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்று முதல் ஏப்ரல் மாதம் வரை அனைவரும் மாஸ்க் அணிய வேண்டும் என வல்லுநர்கள் அறிவுறுத்தி உள்ளனர். இதன்மூலம் குறைந்தது 50 ஆயிரம் பேரின் உயிரைக் காப்பாற்ற முடியும். எனவே, அமெரிக்கர்கள் அனைவரும் அடுத்த 100 நாள்களுக்கு கண்டிப்பாக மாஸ்க் அணிய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆஸ்திரேலிய அரசின் பிரேரணை கூகுள் நிர்வாகி கடும் எச்சரிக்கை

ஊடக நிறுவனங்களின் செய்தி கன்டன்ட்டுகளை பயன்படுத்துவதற்கு பணம் வழங்க வேண்டும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தால், ஆஸ்திரேலியாவில் search எஞ்சின் பயன்பாட்டை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என கூகுள் எச்சரித்துள்ளது.

search எஞ்சின்களின் தேடல் முடிவுகளில், செய்திகளை துணுக்குகளாக பயன்படுத்துவதற்கு, சம்பந்தப்பட்ட செய்தி ஊடக நிறுவனங்களுடன் ஒப்பந்தம்போட்டு, உரிய பணம் வழங்க வேண்டும், தவறினால் மில்லியன் டொலர் கணக்கில் அபராதம் செலுத்த வேண்டும் என ஆஸ்திரேலிய அரசு பிரேரணை கொண்டு வந்துள்ளது.

தங்களது வர்த்தகத்தையும் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்பதால், இந்த பிரேரணை சட்டமாக நடைமுறைக்கு வந்தால், ஆஸ்திரேலியாவில் search எஞ்சின் பயன்பாட்டை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று, கூகுள் நிர்வாகி எச்சரித்துள்ளார்.

# கொரோனா நோயாளியை கையாண்டதில் தவறு; கடும் எதிர்ப்பால் மங்கோலியா பிரதமர் ராஜினாமா





மங்கோலியா நாட்டின் பிரதமர் உக்னா குரேல்சுக் நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அண்மையில் மங்கோலியா வைத்தியசாலை ஒன்றில் குழந்தை பெற்றெடுத்த பெண்ணுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து, அவரை வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்தும் முகாமுக்கு அனுப்பி வைத்தனர். நடுங்கும் குளிரில் வைத்தியசாலை உடை மட்டும் அணிந்திருந்த அப்பெண்ணை பச்சிளம் குழந்தையுடன் தனிமைப் படுத்தல் முகாமுக்கு அனுப்பிய காட்சி, தொலைக்காட்சி சேனல்களில் வெளியானது.

இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. தலைநகர் உலான் படோரில் நேற்று முன்தினம் போராட்டங்கள் வெடித்தன. உடனே, துணை பிரதமரும், சுகாதாரத்துறை மந்திரியும் ராஜினாமா செய்தனர்.

அவர்களை தொடர்ந்து, பிரதமர் உக்னா குரேல்சுக் நேற்று பதவி விலகினார்.


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1993.09.16
மதம் - இந்து S
நட்சத்திரம் - உத்திரம் 1
செவ் - ---
பாவம் - 24 1/4
கல்வி - O/L
தொழில் - பந்தல் தொழில் உரிமையாளர்.
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1985.04.20
மதம் - இந்து S
நட்சத்திரம் - அச்சுவினி
சூ/செவ் - 2 இல்
பாவம் - 74 3/4
கல்வி - A/L
தொழில் - தாதியர்
எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528


# 2022ஆம் ஆண்டு குளிர்கால, பரா ஒலிம்பிக்: புதிய கண்டுபிடிப்புகளுடன் தயாராகும் சீனா



2022ஆம் ஆண்டு நடைபெறும் பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பரா ஒலிம்பிக் போட்டியில் பயன்படுத்தக்கூடிய புதிய கண்டுபிடிப்புகளை சீனா அறிமுகம் செய்துள்ளது.

ஒலிம்பிக்ஸ் வரலாற்றிலேயே முதல் முறையாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் போட்டிகள் நடைபெறும் பெய்ஜிங், யான்கிங், ஹெபே பகுதிகளை இணைக்கும் வகையில் அதிவேக ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சீன விளையாட்டு வீரர்களின் பயிற்சி திறனை மேம்படுத்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது.

# பராமரிப்பற்றுக் கிடக்கும் காணிகள் பிரதேசசபை உடைமையாக்கப்படும்!

## நல்லூரர் தவிசாளர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.22

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பற்ற காணிகள், காணி உரிமையாளர்களால் பராமரிக்கத் தவறினால் குறித்த காணி சபை உடைமையாக்கப்படும் என அந்தப் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் தெரிவித்தார்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களிலுள்ள காணிகள், உரிமையாளர்களால் பராமரிக்கப்படாது புற்கள் வளர்ந்து காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

இந்நிலையில் குறித்த காணிகளை பிரதேச சபை உறுப்பினர்களுடன் நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது டெங்கு நுளம்பு பரவும் நிலை காணப்படுகின்றது. எனவே, நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியைத் தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்கு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையிலுள்ள காணி உரிமையாளர் கள் தமது காணிகளை உடனடியாகத் துப்புரவு செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் குறித்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தவறும் பட்சத்தில் பராமரிப்பற்ற காணிகள் அனைத்தும் நல்லூர் பிரதேச சபையின் உடைமையாக்கபடும் என மயூரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



## கிளிநொச்சி கந்தன் குளத்தினது அணைக்கட்டு ஆபத்தான நிலையில்!

கிளிநொச்சி ஆனந்தநகர் பகுதியில் அமைந்துள்ள கந்தன்குளத்தின் அணைக் கட்டின் ஊடாக பெருமளவு நீர் வெளியேறி வருவதால் அணைக்கட்டுஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

அணைக்கட்டின் துருசு பகுதியின் அருகில் குளத்திலிருந்து நீர் அணைக்கட்டின் ஊடாக வெளியேறிவருகிறது. இது அணைக் கட்டின் மிக மோசமான நிலைமையாகும்.

எனவே, தற்போது இராணுவம் மற்றும் பொது மக்கள் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியோர் இணைந்து மண் மூடைகளை அடுக்கி தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் சேவியர் கடைச் சந்திக்கு அருகில் குளத்தின் கீழ்ப் பகுதி மற்றும் கந்தன் குளத்தின் நீர் வெளியேறுகின்ற உருத்திரபுரம் பகுதியில் வாழ்கின்ற மக்களை அவதானமாக இருக்குமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

## நுவரெலியா மாவட்டத்தில் மிதமான நில நடுக்கம்!

நுவரெலியாவில் மிதமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நுவரெலியா - வலப்பனை பிரதேசத்தை அண்மித்த பகுதியிலேயே இவ்வாறு சிறியளவிலான நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் இந்த நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்துள்ளார்.

ரிக்டர் அளவுகோலில் 1.8 ஆக குறித்த நில அதிர்வு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வியலுவ எகிரிய கிராமத்திலும் குறித்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## போக்குவரத்தில் சுகாதார நடைமுறை பின்பற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை



பொதுப் போக்குவரத்து மற்றும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பொதுப்போக்குவரத்து மற்றும் பாடசாலைமாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு உரிய சுகாதார நியமங்களைப் பின்பற்றாத வாகன சாரதிகள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய வாகன ஆசனங்களுக்கு அமைவாக மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியுமெனவும் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## கொரோனா தொற்றாளர் ஒருவர் தப்பியோட்டம்!

கட்டுநாயக்க வலனாகொட பகுதியில் கொரோனா தொற்றாளர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, அந்த நபரை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்து செல்ல நடவடிக்கைகளை எடுத்த சந்தர்ப்பத்திலேயே அவர் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பதவிய போகஹபிட்டி பகுதியைச் சேர்ந்த 25 வயதான ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் தப்பியோடியுள்ள அந்த நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் உறவினர்களுடன் உரையாட ஒன்லைன் ஏற்பாடுகள்!

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் ஒன்லைன் ஊடாக தமது உறவினர்களுடன் உரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கைதிகளின் உறவினர்கள் சிறைச்சாலைகளுக்கு வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே தற்போது குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் கோரவிபத்து; மூவர் படுகாயமடைவு



யாழ். நகரப் பகுதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகில் நேற்றிரவு (வியாழக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வென்னப்புவ சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், கார் ஒன்றும் மோதிக்கொண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கார் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. விபத்தை அடுத்து பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றுக்குள் புகுந்துள்ளது.

இதன்போது வீதியில் நின்ற ஒருவர், காரின் சாரதி, பஸ்ஸின் சாரதி ஆகியோரே காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மனித உரிமை மீறல்களை ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு நியமனம்!

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மூவரடங்கிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம். நவாஸ் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் குறித்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கை தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காகவே ஜனாதிபதியால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து அதனை எவ்வாறு கையாள்வது தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் விசாரணை ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2021இல் வெளியிடப்பெற்றது.